# Chapter - 11 - Speech for 09-April-2022 - Contd

எல்லாம் வல்ல இறைவன், எல்லாவற்றையும் தன்னுள் பெற்றவன் , எந்த தேவையும் இல்லாதவன், எவராலும் வற்புறுத்தப்பட முடியாதவன், யாருக்கும் கட்டுப்படாதவன், இந்த சிருஷ்டியை படைக்கும் வேலையை ஏன் எடுத்துக் கொண்டான் என்பது போன்ற கேள்விகளைக் கேட்டு, அதற்கான பதில்களாக பகவான் கூறியதை - நான் புரிந்துக் கொண்டதை சென்ற கூடலில் பகிர்ந்துக் கொண்டேன். இன்று ஒன்பதிலிருந்து பதினேழாவது பத்தி வரையிலான என் புரிதலைப் பகிர்ந்துக் கொள்கிறேன்.

இறைவன் ஆனந்தத்தைத் தான் அனுபவிக்க நினைத்தான் என்றால் ஒவ்வொரு முறையும் அறியாமையில் இருந்து வெளியே வந்து ஆனந்தத்தை அனுபவிக்கலாமே. அல்லது நிரந்தரமாக static bliss -ஐ ஆயிரக்கணக்கான ஆண்டுகள் அனுபவிக்கலாமே. அதற்கு ஏன் அவன் பரிணாமத்தை துரிதப்படுத்த வேண்டும். பரிணாமத்தில் முன்னேற வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. அதற்கு கர்மயோகி தரும் பதில் - அறியாமையில் இருந்து - அஞ்ஞானத்திலிருந்து - வெளியே வரும் ஆனந்தம் ஒரே நிலையில் இருந்தால் ஒரே மாதிரியான ஆனந்தம் தான் இருக்கும். பரிணாமத்தில் முன்னேற துரிதப்படுத்தினால், வெவ்வேறு நிலைகள் வரும். வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு விதமான ஆனந்தத்தை அனுபவிக்க முடியும். நிலை உயர்ந்தால் ஆனந்தத்தின் தரம் உயரும். ஆனந்தத்தின் காலம் அதிகமாகும். அதனால் தான் அப்படிப்பட்ட ஒரு ஆனந்தத்தை இறைவன் விரும்புகிறான் என்கிறார்.

உதாரணமாக கர்மயோகி கூறுவது - அன்னை பொதுவாக அனைத்து சாதகர்கள் சித்தத்திற்கும் பொறுப்பேற்கிறார். அது வளர்ந்து அனைத்து உயிருக்குமான, சித்தமாக வளர்ந்து, பாண்டிச்சேரியில் ஆறு அல்லது ஏழு கிலோமீட்டருக்கு தாவரம், விலங்கு, மனிதர்கள் என்று அனைத்து சித்தத்திலும் விரிவடைய ஆரம்பித்தார். தென்னை மரம் பேசியது, பாம்பு பேசியது போன்றவற்றை நாம் படித்து இருக்கிறோம். ஒரு முறை அவர் சித்தம் உலகளாவிய அளவு விரிவடைந்த போது, அவர் பெற்ற ஆனந்தத்தை - ஓஹோ, இறைவன் இப்படித் தான் ஆனந்தத்தை அனுபவிக்கிறானா என்று வியந்தார். நம் சித்தம் முன்னேற முன்னேற, விரிவடைய, விரிவடைய, அது சித்த பூர்வமாக இருக்க இருக்க, அது அடையும் ஆனந்தம் வெவ்வேறு நிலைகளில் உயர்ந்து இருக்கும் என்கிறார் கர்மயோகி.

அத்தகைய ஆனந்தத்தை பெறத் தான் - நம்மில், நம் மூலம் அதனை பெறத் தான் - இறைவன் விரும்புகிறான் என்பது தான் சிருஷ்டியின் அடிப்படை. அது பற்றி சித்த பூர்வமாக இருப்பதால்- அதன் ஆற்றலையும் அது இயல்பாகவே பெற்று இருக்கிறது. வரையறையில்லாத அந்த பிரம்மத்தில், வரையறைக்கு உட்பட்ட ஒரு அம்சமாக, அதன் பகுதியாக - சிருஷ்டி இருக்கும் போது- அவை அனைத்தும் ஆனந்தத்தின் அம்சங்களே. அதனால் மனிதனின் செயல்கள் அனைத்தும் ஆனந்தத்தின் அம்சங்களே. ஆனால் அப்படி நாம் உணருவதில்லை. ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு செயலிலும், அதன் முடிவிலும் இன்பம், துன்பம் என்ற பிரிவினை இருக்கிறது - emotional and sensational faculties . உணர்வு, உணர்ச்சி மையங்களே அதை முடிவு செய்கிறது.

உடல், உணர்வு, ஆகியவற்றின் உணர்ச்சிகள் மற்றும் கிளர்ச்சிகள் மட்டுமே நம் இன்பம், துன்பம் ஆகியவற்றை முடிவு செய்வதாகப் படுகிறது. அதனுள்ளும் சென்று ஆராய்ந்து பார்த்தால், அவற்றிற்கு குறிப்பான அடிப்படையாக கடமை, மனசாட்சி, தர்மம், நியாயம், பாவம், புண்ணியம், கர்மம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட சித்தம் இருக்கிறது. அதை ஒட்டிய செயல், நடத்தை, அறம், ஒழுக்கம் ஆகியவையே மனித மனதை எப்போதும் ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கிறது. அதை ஒட்டிய மனப்பான்மையே நம் இன்ப துன்பத்திற்கும் வலி, ஆனந்தத்திற்கு காரணமாக இருக்கிறது

செயல் என்பது நம் மனம் வெளிப்படுவது. வாழ்வு என்பது நம் மனப்பான்மை வெளிப்படுவது. இரண்டுக்கும் இருக்கும் இந்த முக்கியமான வித்தியாசம் புரியாமல் மனதை வாழ்வில் வெளிப்படுத்தும் போது வாழ்வு அதற்குறிய பலனைத் தருவதில்லை. ஆனந்தத்தை தருவதில்லை. இதை moral dillema என்கிறார்.

மனம் வாழ்வின் மூலம் ஒரு செம்மைக்கு, மனதின் மற்ற உயர்ந்த நிலைக்கு செல்ல வேண்டியதே அதன் வேலை - அதில் தான் அதன் ஆனந்தம் இருக்கிறது என்னும் போது , அதாவது மனித சட்டங்களை வாழ்வில் பொருத்தி பார்க்கும் போது, அது முட்டாள்த்தனமான அஃஞானமான தவறாகிறது. உதாரணமாக, மனம் சூழ்நிலைகளை ஒட்டி, நடத்தை, பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றை ஒட்டி ஒரு செயலில் கண்ணியத்தை, கடைபிடிக்கலாம். ஆனால் வாழ்வு அதை பார்க்காது. அதன் பின் உள்ள மனப்பான்மையையே பார்க்கும். அதன் பின் உள்ள strength -ஐ, பலத்தைப் பார்க்கும். உதாரணமாக, நல்லவர்கள் என்ற கூற்றுப்படி நடப்பவர்கள் பெரும்பாலும் வாழ்வில் பெரிய வெற்றி பெறுவதில்லை. காரணம் அவர்கள்

ஒழுக்கம், அறம், சமூகத்தை சார்ந்தது. சமூக கட்டமைப்பு , அதன் ஒத்துழைப்பு அதன் மேல் உள்ள பயம் காரணமாக வந்தது. மனப்பான்மையாலோ, உயர்சித்தத்தாலோ வந்தது அல்ல.

செயல்கள் எப்படி இருந்தாலும், ஆர்வம் இறைவனை நோக்கி இருந்தால், மனிதனே இறைவனாகிறான். அந்த inner purity - வாழ்வை எந்த விதத்திலும் பாதிக்கவிடாது. வெளியே நடக்கும் செயல் எதுவும் அவனுக்குப் பொருட்டல்ல. அவன் வாழ்வு ஆனந்தமயமாக இருக்கும்.

அப்படி இல்லாமல், மனதில் organized falsehood - ஆக , கயமை, சுயநலம் என்று இருந்தால், வாழ்வு ஆரம்பத்தில் அவனின் வேறு சில திறமைகளுக்கு அளிக்கும் பலனை மட்டும் தான் நாம் பார்க்கிறோம். வேலையில், கடமையில், சேவையில் தவறு செய்தவர்கள் கடைசியில் தண்டிக்கப்படுவதை நாம் கவனிப்பதில்லை.

எனக்கு இருபது ஆண்டுகளாக ஒருவரைத் தெரியும். அவர் கடந்த இருபது ஆண்டுகளில், தோசைக் கடையில் இருந்து இருபது ஆண்டுகளில் 1000 கோடி turn over என்னும் அளவுக்கு உயர்ந்தார். அனைத்தும், துரோகம், கயமை, சட்டவிரோதம் என்ற அடிப்படையில் வந்தவை. இன்று வயதான காலத்தில், அவர் கைது செய்யப்பட்டு, ஐந்து லட்சம் கூட ஜாமீன் கட்ட முடியாமல் இருக்கிறார். இத்தனைக்கும் அவர் பிறந்த கிராமத்திற்கு அவர் நிறைய செய்து இருக்கிறார். அவரது தந்தையை அந்த ஊர்க்காரரர்கள் இன்றும் தெய்வமாக மதிக்கிறார்கள். மதுபான தயாரிப்பாளர்கள் பலரும் போற்றப்படுகிறார்கள். வள்ளல் என்றும் கல்வித்தந்தை என்றும் அழைக்கப்படுபவர் பல உண்டு. அத்தனை பேரின் இறுதி காலமும் கஷ்ட காலமாகவே இருந்திருக்கிறது. அவர்கள் எல்லாம் ஆனந்தமாக வாழ்வதாக நான் நினைத்துக்கொண்டு இருந்தேன்.

அதை சுருக்கமாக, ஆனந்தம் என்பது society -க்கு Behavior - Supramental -க்கு attitude என்கிறார். சமுதாயத்திற்கு நடத்தை முக்கியம், அதிமனத்திற்கு மனப்பாண்மை , நோக்கம் முக்கியம் என்கிறார். நான் ரொம்ப நல்லவன். அதனால் நான் கண்ணை மூடிக் கொண்டு காரை ஓட்டுவேன் என்றால், விபத்து தான் நடக்கும். வாழ்வு driver -ன் திறமையைத் தான் பார்க்குமே தவிர அவன் வேறு வகையில் நல்லவனா என்று பார்த்து பலன் அளிப்பதில்லை.

பொதுவாக பயந்தவர்களுக்கு, பலவீனமானவர்களுக்கு உதவுவது என்பது சமுதாயத்தின் தர்மம். ஆனால் வாழ்வு பலவீனமானவர்களை விரட்டும்.

தைரியசாலியை  ஆதரிக்கும்.  அதாவது வாழ்வின் தர்மம், சமுதாய தர்மதிற்கு மாறானது. அது புரியவில்லை என்றால், நான் நல்லவன், நல்லதுதான் செய்கிறேன், மனசாட்சிப்படிதான் நடக்கிறேன்  ஆனால் வாழ்வு அதற்கு சரியான  மறு மொழி தரவில்லை என்று வேதனைப்படுவோம். தர்மம், சட்டம், ஆகியவற்றை பற்றிய நம் தவறான புரிதல் நம் வேதனைக்கு காரணமாகிறது. கடமையும், திறமையும், அதிகாரமும் இல்லாத இடத்தில் ஒரு காரியத்தைச் செய்வது மடமை. உதவி, பரோபகாரம், பச்சாதாபம் என்ற பெயரில் அதைச் செய்து விட்டு துரோகம் என்னும் வலியை அனுபவித்தவர் பலர்.

இவற்றையெல்லாம் சுருக்கமாக, வாழ்வை அறிந்தவன் விவேகியாகிறான். ஆன்மாவை அறிந்தவன் ஞானியாகிறான் என்று ஒரே வரியில் கூறுகிறார் கர்மயோகி.   இவற்றுக்கெல்லாம் அடிப்படை ethical problem.   அறம், தர்மம், நன்னெறி, அதன் சட்டங்கள் ஆகியவற்றை பற்றிய தவறான புரிதல்,  அதை ஒட்டிய கிளர்ச்சிகள்,  உணர்ச்சிகள்  என்று பார்த்தோம்.  அதற்கு முடிவாக வலி, துன்பம் என்பது எப்படி ஏற்பட்ட -. தர்மம், அறம், நியாயம் என்று நாம் நினைப்பவற்றை சார்ந்தவை - தீமை என்று சொல்லப்படுவது அறியாமை என்று எடுத்துக் கொண்டால் அதற்கு துன்பம்,  வலி என்னும் தண்டனையை கொடுப்பது யார்.  தர்மம் தவறியதால்,  நியாயம் தவறியதால்,  அறம் தவறியதால்,  நடத்தை,  பண்பாடு ஆகியவற்றில் தவறியதால் ஏற்பட்டது என்று எடுத்துக் கொண்டால்,  அதை கவனித்துக் கொண்டு இருப்பவர் யார். யாரோ மேல் உலகத்தில் இருந்துக்  கொண்டு இதையெல்லாம் பார்த்துக்கொண்டு அதற்கான இன்பம், துன்பம் ஆகியவற்றைத் தருகிறாரா?.  இது போன்ற நினைப்பு தான் நம் வலி, துன்பம், குழப்பத்திற்கு காரணம். We do not live in ethical world என்பது நமக்கு புரியவில்லை.  நாம் நினைப்பது போன்ற,  அறம், தர்மம் சார்ந்த உலகில் நாம் வாழவில்லை.  அது புரியாததால், தன்னை உயர்ந்தவனாக  பார்க்க,  தன் மனித நிலையில் முன்னேறிய  ஒருவனாக பார்க்க,  தன்னை  தானே நல்லவன் என்று நிரூபித்துக்கொள்ள, அதன் மூலம் அகந்தைக்கு ஒரு திருப்தி வர - அவன் வாழ்விற்கு  ஒரு தர்மம், நியாயம் போன்ற அடிப்படைகளை  வைத்து, அறம் சார்ந்த அர்த்தத்தை கற்பிக்க நினைக்கிறான்.  அதை ஒட்டி இருப்பதை நெறி நிறைந்த வாழ்வு என்றும் அது ஆனந்தத்தைத் என்று நினைக்கிறான்.  அது வலியை தரும் போது அந்த தர்ம,  நியாயத்தின் மீதோ அல்லது அதை வெளிப்படுத்தும்  வாழ்வின் மீதோ நம்பிக்கை இழக்கிறான்.  காரணம் எதையும் அவன் தானறிந்த நல்லது,  அறம்,  தர்மம்,  நியாயம் ஆகியவற்றை ஒட்டியே  எல்லாவற்றையும் மதிப்பிடுகிறான்.

ஆக்ரோஷத்துடன் ஓடி வரும் மாட்டின் முன், நான் நல்லவன், vegetarian, மாட்டுக்கறி சாப்பிட மாட்டேன். மாட்டை லக்ஷ்மியாக வழிபடுபவன். அதனால் அது முட்டாது என்பது என்பது எவ்வள்வு முட்டாள் தனமான வாதமோ - அந்த அளவிற்க்கு நாம் அறிந்த தர்ம நியாயங்களை வைத்து வாழ்வு இப்படி தான் மறுமொழி கூறும் என்று நினைக்கிறோம். பல ஆண்டுகளுக்கு முன் என் வீட்டின் அருகில் ஒரு பெண்மணி வீட்டிற்கு பாம்பு வந்த போது, அது படம் எடுக்கும் போது,நாகராஜானே ஆசீர்வதிக்க வந்திருக்கிறார் என்று நினைத்து அருகில் சென்று வணங்கினார். அது பட்டென்று போட்டதில் இவர் பொட்டென்று போய் விட்டார். பாம்பென்றால் படையும் நடுங்கும் என்ற பழமொழியை காலம் காலமாக அறிந்திருந்தாலும்,அந்த விவேகத்தை வாழ்வில் பயன்படுத்தாததன் பலன் இது.

அன்னையிடமும் அப்படித் தான் இருக்கிறோம். அன்னை ஒரு பரிணாமத்தை முன்னேற்ற வந்த சக்தி என்று எவ்வளவு சொன்னாலும் அதை கடவுள் என்னும் நாமறிந்த வடிவத்தில் அடக்கி, அதை நாம் அறிந்த வழியில் பெற நினைக்கிறோம். நீ இதை செய்யவில்லை என்றால் உனக்கு Grace வராது, நீ எனக்கு காணிக்கை தரவில்லை என்றால் நீ முன்னேற மாட்டாய், நீ புத்தக சேவை செய்யவில்லை என்றால் உனக்கு நல்லது எதுவும் நடக்காது , என்று அன்னையை பூச்சாண்டி போல சித்தரித்து தன்னை வளர்த்துக் கொள்ளும் சிலரின் பின்னால் பலி ஆடுகளாக செல்கிற பலர் இருக்கிறார்கள். அன்னை அவ்வளவு cheap ஆனவரா என்று நாம் நினைத்துக் கூட பார்ப்பதில்லை. அன்னைக்கும் நமக்கும் நடுவில் mediators - கள் தேவையில்லை என்று புரியாமல் - அவர்கள் தான் உண்மையில் நம் முன்னேற்றத்திற்கும் , ஆனந்தத்திற்கும் தடை என்பதையும் உணராமல், அன்னை எதுவும் செய்யவில்லை, அன்னை பலிக்கவில்லை, அன்னை கை விட்டு விட்டார்கள் என்று நினைக்கிறோம். அதையும் அடக்கத்தின் தலைவன் நான் தான் என்னும் அளவிற்கு என்னிடம் தான் குறை இருக்கிறது என்று சொல்லிக் கொள்வோம்.

தன் மகள் இன்னொருவருக்கு மருமகள் ஆன பிறகு தாய், சம்பந்தியின் தர்மத்தை பின் பற்ற வேண்டும். ஒரு பெண் மகள் என்னும் நிலையில் இருந்து மனைவி என்னும் நிலைக்கு வரும் போது, அதற்கான தர்மத்தை பின்பற்ற வேண்டும். ஒரு தாய் சம்பந்தியாவதும் - பெண் மனைவியாவதும் பரிணாமத்தில் வளர்ச்சி. அந்த நிலைக்கான தர்மத்தை பின்பற்ற வேண்டும். அடுத்த நிலைக்கு சென்ற பிறகும், நம் அறிவு, மனம், சூழல் எல்லாம் மாறிய பிறகும், முந்தைய நிலையை கடைபிடிப்பதே - வாழ்வில் துன்பம், வலி

ஆகியவற்றை தந்து - திருமண வாழ்வின் ஆனந்தத்தை அனுபவிக்க முடியாமல் செய்கிறது. இதே போன்று தான் நாம், நம் துன்பம், வலி என்று நினைக்கும் இடங்களிலெல்லாம் கவனித்தால், அங்கெல்லாம் அந்த நிலைக்கான சட்டங்களை எடுக்காமல், வேறு முந்தைய நிலைகளுக்கான சட்டங்களை எடுத்திருப்போம்.

அதற்கு அடுத்த வலி guilty consciousness மூலம் வருகிறது. நாமறிந்த தர்மம், நியாயம் ஆகியவற்றிற்கு கட்டுப்பட முடியாமல், ஒரு செயலைச் செய்யும் போது, ஏதோ தவறு செய்ததாக நினைத்து பாவம், புண்ணியம் பற்றி கவலைப்பட்டு அதன் மூலம், நிம்மதி இழந்து துன்பம் அனுபவிப்பது.

காற்று, மழை, தன் நல்லவற்றை மீறி அழிவையும் ஏற்படுத்துகிறது. சுனாமி வந்து ஏராளமானவர்களை அழிக்கிறது. நெருப்பு ஏராளமான நல்லதை செய்தாலும் அழிக்கும் வேலையையும் செய்கிறது. புலி மானை அடித்து சாப்பிடுகிறது. எலி தானியங்களை நாசப்படுத்துகிறது. அவற்றை எல்லாம் நாம் தவறு என்று சொல்வதில்லை . காரணம், அவை இருக்கும் நிலைக்கு அவற்றின் செயல், தர்மம், சட்டம் சரி என்று நினைக்கிறோம் . ஆனால் நாமுள்ள நிலைக்கான, வாழ்வுக்கான தர்மத்தை நாம் சரியாக புரிந்துக் கொள்வதில்லை

மனிதன் என்ற நிலையில் இருந்து தான் இந்த பிரச்சனை ஆரம்பிக்கிறது. அதற்கு முன் நிலைகளான இயற்கை, தாவரம், விலங்குகள் ஆகியவற்றிற்கு இந்த பிரச்சினைகள் இல்லை. காரணம், தர்மம், நியாயம், கர்மம், பாவம், புண்ணியம் என்றெல்லாம் ஒன்றை பிரித்து பார்க்கும் மனம் - மனிதனுக்குத் தான் இருக்கிறது. அதைத் தாண்டி மனங்கள் வளரும் போது, சித்தம் உயரும் போது, அதற்கான தர்மத்தையும் புரிந்துக் கொள்ள நினைக்கிறான். இந்த மூன்று நிலைகளுக்கும் பொதுவான நிலை ஒன்று இருந்தால்தான் - எல்லா நிலைகளிளும் நம்மால் ஆனந்தத்தை அனுபவிக்க முடியும்.

மற்றவர்களைக் குறை சொல்லும் போது என்ன நெறிகள், நியாயத்தை பின்பற்றுகிறோமோ அதே நியாயத்தை தான் நமக்கும் பயன்படுத்த வேண்டும். மற்றவர்கள் என்ன நெறிகள், நியாயத்தை பின்பற்ற வேண்டும் என்று நினைக்கிறோமோ, அதையே நாமும் பின்பற்ற வேண்டும். அது தான் உண்மையான அறம் சார்ந்த வாழ்வாக இருக்க முடியும். ஆனந்தத்திற்கான தீர்வாக இருக்க முடியும். நெறிமுறைகள் வெவ்வேறாக இருந்தாலும் அது அடையும் இலக்கு ஒன்றாக இருக்க வேண்டும். அது ஆனந்தம் என்பதாக இருக்க வேண்டும். உதாரணமாக என்னைப் போலத்தான் அவரும்

இருக்கிறார் என்று நினைத்துவிட்டால், பல துன்பங்களுக்கு அடிப்படையே இல்லாமல் போய்விடும். வீடு முதல் உலகம் வரை சுமுகம் இல்லாமல் இருப்பதற்கு காரணம் இந்த சமநிலை இல்லாத நிலை தான். இத்தகைய குழப்பங்கள் நம்மை துன்பத்தில் ஆழ்த்தி தர்ம, நியாயங்கள் பற்றிய நம் நம்பிக்கையை வரையறுத்து, உணர்வின் எதிர்ப்பாக , அறிவின் கயமையாக மாற்றுகிறது. நம்மை பாதிப்பதை எதிர்ப்பது, நமக்கு இனிமையாக இருப்பவற்றை ஏற்றுக் கொள்வது, யார் நம்மை புகழ்கிறார்களோ அவர்களை ஏற்றுக் கொள்வது, இகழ்பவர்களைப் பிடிக்காதது - நமக்கு பயம் வரும் இடங்களை - மனிதர்களை, கெட்டதாக பார்ப்பது - மற்றவற்றை நல்லதாகப் பார்ப்பது என்று மேலும் மேலும் அகந்தையை , மனதின், எண்ணத்தின் பிரிவினைக்குள் சென்று - emotional and sensitivities -க்குள் சென்று எது உண்மையான ஆனந்தம் என்பதையே மறந்து விட்டோம்.

நம் இருப்பின் existence -இல் இருக்கும் அத்தனை களேபரத்தையும் மீறி நாம் ஆனந்தம் அடைந்த இடங்களை கொஞ்சம் ஆராய்ந்து பார்ப்போம். அல்லது இன்னொரு கோணத்தில் சிந்தித்துப் பார்ப்போம். வாழ்வில் நாம் உறவுகளை – சமுதாயத்தை - அதன் நெறிகளை ஒட்டி வாழ்ந்துக் கொண்டு இருந்தாலும் - நமக்கு passion என்ற அளவில் ஒன்று இருந்தால், hobby என்ற அளவில் ஒன்று இருந்தால் - அதை நாம் செய்யும் போது நாம் ஒரு வகையான ஆனந்தத்தை அடைகிறோம். அது dance ஆக இருக்கலாம், வீணையாக இருக்கலாம், புத்தகங்கள் படிப்பதாக இருக்கலாம், ஊர் சுற்றிப் பார்ப்பதாக இருக்கலாம், இயற்கையை ரசிப்பதாக இருக்கலாம், அதில் மற்றவற்றை விட சற்று அதிக ஆனந்தம் இருப்பதாகப்படும். அதாவது பொதுவான இருப்பைத் தாண்டிய ஒரு சுய வெளிப்பாட்டை (Self expression ), அல்லது வேறு வகையான சுய முன்னேற்றத்தை (self progress) விரும்புகிறான். அடுத்த கட்ட மனநிலையை பெற முயல்கிறான். இந்த மனப்பான்மையின் நோக்கில் அதை விரிவுப்படுத்தி பார்த்தால், அவன் வாழ்வில், நடத்தையில் பொருத்திப் பார்த்தால் சுய வெளிப்பாட்டை விரும்பும், அவனுள் உள்ள சித்த பூர்வமான ஆற்றல் ஒன்று அதை வெளிப்படுத்திக் கொண்டு இருப்பது தெரியும். எது அதைத் தடை செய்கிறதோ, தனக்கு பிடித்தமானதை செய்ய - அவன் முன்னேறி செல்வதை - அதில் அவன் அடையும் திருப்தியை தடை செய்கிறதோ, அது அவனுக்குத் தீமையாகத் தெரிகிறது. அதை செய்யும் மனிதர்கள் தீய சக்திகளாக தோன்றுகின்றனர். அதாவது சுயவெளிப்பாட்டை, சுய விருப்பத்தை வெளிப்பட உதவும் சூழல், மனிதர்கள் ஆகியவற்றை நல்லது என்று நினைக்கிறான். அவை மட்டுமே தனக்கு ஏற்றது என்று நினைக்கிறான். இங்கு தான் மனதின் பிரிவினை ஆரம்பிக்கிறது. நமக்கு

நன்மை எது , தீமை எது என்று நாம் முடிவு செய்ய ஆரம்பிக்கிறோம். அது நம்முடைய self-expression ஆக  இல்லாமல் - பிறரை சார்ந்து இருக்கிறது. அதனால் பெரும்பாலும் வலியாக, துன்பமாக ,சில சமயம் ஆனந்தமாகவும் முடிகிறது. அவனுடைய self expression  - சுய வெளிப்பாடு, வருவதற்கு - சுய முன்னேற்றம் என்று அவன் நினைப்பவற்றிற்கு ஏற்படும் தடைகளுக்கு ஏற்றாற்போல அவன் தர்மங்களும் அதன் நெறிகளும் மாறுகிறது.  ஆனால் அதே நேரத்தில் அவன் பெறும்  உயர்வுக்கு ஏற்ற நடத்தை, மனநிலை, எண்ணம், சித்தம் ஓரளவுக்காவது வருகிறது. அதனால் தர்மத்தை ஒட்டிய - அதன் நெறிகளை ஒட்டிய - பிரிவினை என்பது  பரிணாம வளர்ச்சியின் ஒரு படி என்கிறார். Ethics is a stage in evolution என்று கூறுகிறார் பகவான். அனைத்து நிலைகளுக்கும் பொதுவானது எது என்றால் - சுய வெளிப்பாட்டுக்கான சதசித்தானந்தத்தின் தூண்டுதல்கள் தான்.  தன்னை தானே அறிவதில், தன் வெளிப்பாட்டில், தன் வளர்ச்சியில் அது தான் பெற நினைத்த ஆனந்தத்தை பெற முயல்கிறது.

நாம் யாரையாவது ஏமாற்றும் போது அந்த கயமையை சாமர்த்தியம், ராஜதந்திரம் என்றெல்லாம் நம் அறிவின் முன்னேற்றமாக ஏற்றுக் கொண்டு ஆனந்தப்படுகிறோம்.  நாம் ஏமாறும் போது அது பிறரின் ராஜதந்திரம் என்று ஏற்றுக் கொள்ள முடியவில்லை.  நம் கம்பனிக்கு வரவேண்டிய பணத்தை நம் மானேஜர் தனிப்பட்ட முறையில் வாங்கி கொண்டு செலவழித்தால் அதை துரோகம் என்கிறோம். அதையே வேறு ஒருவர் தன்  ஸ்தாபனத்திற்கு வரவேண்டிய பணத்தை எனக்கு தனிப்பட்ட முறையில் கொடுங்கள் என்று கூறினால்  கொடுக்கிறோம். அது அதன் ஸ்தாபகருக்கு நாம் செய்யும் துரோகம் என்று நமக்கு தோன்றுவதில்லை. அதன் பின்னல் இருக்கும் சுயநலம், கயமை நமக்கு தெரிவதில்லை. அதாவது நாம் அறிந்த தர்மத்தை அதன் நெறிகளை ஒரு சமநிலையான பார்வையில் பார்க்க முடியவில்லை. Man is half ethical என்னும் இந்த நிலையில் இருந்து தான்  நம் பிரச்சினைகள், வலிகள், துன்பங்கள் ஆரம்பிக்கிறது.  அல்லது நாம் அடைய வேண்டிய ஆனந்தத்தை தடை செய்கிறது.

அதை ஒட்டி நாம் தர்மம், நியாயம், நெறி, ஒழுக்கம், அறம் என்று நினைப்பவற்றை மூன்று வகையாகப் பிரிக்கிறார்.  Infra ethical  - Ethical  - Supra Ethical  என்று மூன்று வகையாகப் பிரிக்கிறார். இயற்கை, தாவரம். விலங்குகள் போன்றவற்றை மனித நிலைக்கு கீழாக இருப்பவை Infra ethical .

மனித இனத்திற்கு மேலான நிலைகள் supra ethical . இந்த இரண்டுக்கும் ethics தேவையிலை. இங்கு நாம் நினைக்கும் ஒழுக்கம், அறம் , தர்மம், நியாயம்

சார்ந்த நிலைகள் கிடையாது. அவற்றுக்கான நெறிகளை அவை தவறாமல் பின்பற்றுகின்றன.

தர்மம் சார்ந்த நெறி, நியதி, கருத்து, உந்துதல் என்பது மனித இனத்திற்கே மிகவும் முக்கியமானதாக கருதப்படுகிறது.மனித இனத்திற்கே வலியுறுத்தப்படுகிறது. காரணம் சுய வெளிப்பாட்டுக்கு தடையாக இருக்கும் சூழல்களை, சுமுகமற்ற தாழ்ந்த சூழல்களை, அதன் பின் உள்ள குறுகிய மனம், வரையறை ஆகியவற்றைத் தாண்டி, போராடி வெளியே வருவதற்கு நமக்கு ஒரு வழிமுறை தேவைப்படுகிறது. அது பரிணாமத்திற்கு ஒரு படியாக அமைய வேண்டிய அவசியமாகிறது. ஒரு ஒருமை நிலைக்கு செல்ல அந்த வெளிப்பாடுகள் அவசியமாகிறது. அந்த இலக்கை எட்டிய பிறகு இவற்றிக்கு அவசியம் இல்லாமல் போய் விடும். ஒரு பொது தர்மத்தின் சொரூபமாக மனிதன் மாறி விடுகிறான். தெய்வீக நிலை என்னும் நிலையை  மனிதன் அடைகிறான். எதிரான நிலைகள் அனைத்தும் சரியாகி வாழ்வில், பரிணாமத்தில் முன்னேற்றம் மட்டுமே வரும். இறைவனின் சுயவெளிப்பாடு என்பதால், ஆனந்தம் மட்டுமே இருக்கும். அது வாழ்வில் immoral, moral , amoral என்று வெளிப்படுகிறது.

இவற்றிற்கான எல்லா வார்த்தைகளையும் ethics , கர்மயோகி தர்மம் என்றே பெரும்பாலும் குறிப்பிடுகிறார். சில இடங்களில் moral என்பதை நெறி, ஒழுக்கம், என்று குறிப்பிடுகிறார். அவற்றை நான் விளக்கும் போது எனக்கு ஒரு தெளிவின்மை இருப்பதால், இங்கே பகவான் தந்த அந்த ஆங்கில வார்த்தைகளையே பயன்படுத்துகிறேன். இதை வழக்கம் போல என் வாழ்வில் நடந்தவற்றை வைத்தே விளக்க முற்படுகிறேன்.

ஆரம்பத்திலே நண்பர்களுடன் சுற்றுவது அவர்களுக்காக  எதையும் செய்வது, விளைவுகள் பற்றி கவலைகள் கிடையாதது, அது சரியா, தவறா என்ற பாகுபாடு கிடையாதது என்று எனக்கு நானே ஒரு நியாயம் கற்பித்துக் கொண்டு இருந்தேன். அது infra ethical என்னும் நிலை.

பெரும்பாலும் immoral activities என்னும்  செயல்களே நிரம்பியதாக அது இருந்தது. மனம் வெளியே வராத ஜடமான ஒரு நிலை அது.

அதன் பிறகு சில காரணங்களுக்காக, நான் ஏன் இப்படி இருக்கிறேன் என்று தோன்றிய போது சமூகத்தின் தர்மம், நியாயம், அதன் நியதி, அதை ஒட்டிய வாழ்வு முறை புரிந்தது. திருந்தி வேலைக்குச் சென்றேன். immoral activities -ஐ விட்டு விலகி moral என்பதை, ஒட்டிய செயல்கள், மனிதன் என்பதற்கான

சமுதாயம் வகுத்த பண்பாடு, காலாச்சாரம், நடத்தை, ஆகியவற்றை எடுத்துக் கொள்ள ஆரம்பித்தேன்

மனமும், வாழ்வும் ஒரு நிலையில் முன்னேறினாலும், பழைய நண்பர்களின் தொடர்பை விட முடியவில்லை. காரணம், எனது இக்கட்டான தருணங்களில், உயிருக்கே ஆபத்தான தருணங்களில் அவர்கள் செய்த உதவிகளை மறக்க முடியாதது - அதற்கான விசுவாசம், நன்றியறிதலுடனே இருக்க வேண்டும் என்பதே ethics -ன் சட்டம். அதனால் கெட்ட பழக்கங்களை விட்டால் கூட, அவர்கள் கூப்பிடுகிறார்கள்  என்பதற்காக அவர்களுடன் செல்வேன். பிடிக்கவில்லை என்றாலும் - இன்று நானுள்ள நிலைக்கு, அதாவது அப்போது நான் supervisor என்னும் வளர்ந்து விட்ட நிலைக்கு  இது சரியல்ல என்று மனது சொன்னாலும், நல்லது கெட்டது என்ற பிரிவினை தெரிந்தாலும், அதை என்னால் விட முடியவில்லை. எப்படி சொல்வது, எப்படி மறுத்து பேசுவது என்னும் முன் சொன்ன guilty consciousness வந்தது.  அதாவது half ethics என்னும் நிலைக்கு வந்தேன். பனை மரத்தடியில் நின்று பால் குடித்தேன். நான் வேலை செய்த unit -இல் மட்டுமல்ல, அந்தத் தெருவில் இருந்த அனைத்து unit -டிலும் வேலை செய்பவர்களும் என்னை இன்னும் திருந்தவில்லை, மாறவில்லை என்றே பார்த்தார்கள்.

அப்போது தான் மனித சுபாவம் என்னும் புத்தகத்தில் மனசாட்சி, விசுவாசம், என்பதெல்லாம் பெரும்பாலும் அகந்தையின் வெளிப்பாடுகளே, தர்மத்தை நம் இஷ்டத்திற்கு வலைப்பதாகவே இருக்கும். அதிலிருந்து வெளியே வருவது தான் முன்னேற்றம், பரிணாமம் என்று படித்தேன். நடப்பது நடக்கட்டும் என்று அத்தனை பேரின் தொடர்பையும் துண்டித்தேன். அதாவது ethical -லில் இருந்து supra ethical -க்கு ஒரு பொதுவான தர்மத்திற்கு, முன்னேற்றத்திற்கான நெறிக்கு வந்தேன். அடுத்த சில நாட்களில் இப்போது நான் இருக்கும் field -இல் இருந்த ஒரு comapny -யிடம் இருந்து அழைப்பு வந்தது. அன்றிலிருந்து இன்று வரை நான் பெறுவது ஆனந்தம் மட்டுமே. இந்த அறிவு, விவேகம், வளம் - அன்று நான் எடுத்த முடிவால் வந்தது.  அது amoral என்னும் நிலை. ethics-ஐ பற்றிய முன்முடிவுகள், அபிப்ராயங்கள் இல்லாத ஒரு நிலை அது.  (Lodge  - Nidhivendan -Corporation)

இதையே அன்னையை வைத்து கர்மயோகி ஒரு விளக்கம் தந்து இருக்கிறார். அன்னையை நாமறிந்த ஒரு தெய்வமாக நினைத்து தெய்வங்களைப் பற்றி நாம் அறிந்தவற்றை அவரில் பொருத்தி பார்த்து, அதன் படி நடப்பது ஜடமான ஓர் நிலை. அதை infra ethical என்று கூறலாம்.

நாம் அறிந்த உயர்ந்த பண்புகளை அன்னைக்காக என்று எடுத்துக் கொண்டு சமுதாய வரையரைக்கு  உட்பட்டு செய்வது ethical என்னும் நிலை.

இந்த வரையறை எதற்கும் உட்படாமல் அன்னை என்பது ஒரு சக்தி, அது பரிணாமத்திற்கான ஆற்றல். அதற்கு ஒரு நோக்கம் உண்டு. பரிணாமத்தை துரிதப்படுத்துவது. அந்த நோக்கத்தை ஒட்டிய நம் நிலைகள், முடிவுகள் அனைத்தும் ஆனந்தத்தை தரும். அது நம் வரையறை, சமுதாய வரையறை ஆகியவற்றை நாமறிந்த தர்ம, நியாயங்களை மீறியதாகக் கூட இருக்கலாம். ஆனால் அதை மட்டுமே எடுத்துக் கொண்டு செய்வது supra ethics . அந்த நிலை நம் ஆன்மாவுடன் அல்லது அன்னையுடன் ஒன்றும் ஒரு நிலை அது amoral  . இதை புரிந்துக் கொள்ளாமல் நாம் செய்தால் நமக்கு வாழ்வில் கிடைப்பது ஏமாறல் அதாவது ஏமாற்றமே என்று நகைச்சுவையாகக் குறிப்பிடுகிறார்.

இன்னொரு உதாரணம் - நான் முதலில் ஒரு chemical company -யில் சேர்ந்த போது அது government contract -களை செய்யும் company ஆக இருந்தது. லஞ்சம், quality -யில் compromise செய்வது போன்றே அது இருந்தது. அதை அப்படியே ஏற்றுக் கொண்டு - சரி, தவறு என்று எதையும் பார்க்காமல், வாங்கும் சமபளத்திற்கு வேலை என்னும் அளவில் செய்தேன். அது Infra ethical என்னும் நிலை. அவர்களுக்கு immoral activitities -க்கு நான் துணை நின்றேன். மனித சுபாவம் படித்த பிறகு - அதில் சொன்ன - owner conscisouss -ஐ தொடுதல் போன்ற முறைகளை பயன்படுத்தி token act ஆக ஒரு project -இல் ethics -ஐ பின் பற்றிய போது - வந்த result -ஐ பார்த்து அந்த companyயே லஞ்சம் தந்து செய்ய வேண்டிய contract-கள்  தேவையில்லை என்றும்,. ethical business செய்வோம் என்றும்  வந்து விட்டது. அது என் moral நிலை - உண்மையில் moral victory என்று கூட சொல்லலாம்.

அதன் பிறகு, பல முறை கூறிய உதாரணம் போல அந்த கம்பெனியில் ஒரு லட்சம் மற்றும் அதற்கு மேலும் மாத சம்பளம் பெரும் நிலைக்கு வந்தேன். owner -அவ்வளவு தர முடியாமல்  தர முடியாமல் என்னை partner ஆக்கிக் கொண்டார். அதன் பிறகு ஏராளமான செலவு கணக்குகள் காட்டி capital expense-களை செலவு கணக்காக காட்டி, லாபத்தின் பங்கை குறைவாக காட்டி, எனக்கு குறைவாக தர ஆரம்பித்தார். இனி இங்கே இருந்தால் சரி இல்லை என்று தோன்றியது. விட நினைத்தேன்.  வீடு, நண்பர்கள், supplier என்று அனைவரிடமும் இருந்தும் எதிர்ப்பு. இதை விட நல்ல வாழ்வு கிடைக்காது  இத்தனை வருடம் அவர் தந்தை போல பார்த்துக் கொண்டார். பணம் இன்று வரும், நாளை போகும். உறவுகளை விடுவது, விசுவாசம், மனசாட்சி இல்லாமல் இருப்பது தவறு - நீங்கள் இருவரும் பிரிவது சரியல்ல

என்று ஏராளமான அறிவுரை. இவை அனைத்தும் சமுதாய moral , ethics -க்கு உட்பட்டது என்பதை இங்கு நினைவுப் படுத்திக் கொள்ள வேண்டும். இதை கர்மயோகிக்கு எழுதி கேட்ட போது, அங்கு இரு, இன்னும் அதிகம் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன், பணத்தை பற்றிய, பங்கை பற்றிய விருப்பு வெறுப்பு இல்லாமல் இரு. Life initiative எடுக்கும் போது வெளியே வா என்றார். அன்றிலிருந்து என் பங்கைப் பற்றி நினைக்காமல் என் owner -ரின் இருபது வருட அறிவை, அனுபவத்தை, ஞானத்தை பெற மட்டுமே உழைத்தேன்.

ஆறு மாதத்தில் வேறு கம்பெனி 25 லட்சம் deposit செய்து பெறக்கூடிய distributorship-ஐ இலவசமாகத் தருகிறோம் எங்கள் product -ஐ promote செய்யுங்கள் என்று வந்தார்கள். Life initiative எடுப்பது புரிந்து, அதை ஏற்றுக் கொண்டு வெளியே வந்தேன். அந்த ஆறு மாதம் நான் பெற்ற அறிவு தான் கடந்த 15 வருடமாக எனக்கு ஆனந்தத்தை தந்து கொண்டு இருக்கிறது. விசுவாசம், மனசாட்சி போன்றவற்றை விட்டு அடுத்த கட்ட முன்னேற்றத்திற்கு நான் எடுத்த முடிவு இன்று இந்த வளத்தை தந்து இருக்கிறது. அது supra ethical . Amoral என்பது ஒரு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

தருமர், பீஷ்மர், கர்ணன், துரியோதனன், நளன் , ஹரிச்சந்திரன் என்று புராணங்களிலும், இதிகாசங்களிலும் வரும் நூற்றுக்கணக்கான பாத்திரங்களை கவனித்தால் அவர்கள் தர்மம் நியாயம் என்று நினைத்து எடுத்த முடிவுகள் அனைத்தும் பிரச்சினை , போர் என்று போய் தான் அவர்கள் நினைத்ததை சாதித்து இருக்கிறார்கள். அப்படி இல்லாமல், உயர்ந்த நோக்கம், சுமுகம் , விட்டுக்கொடுத்தல், உயர் கடமை, கொள்கை பிடிப்பு, போன்ற உயர் சித்த நிலைகளை எடுத்துக் கொண்டிருந்தால், போராட்டம், பிரச்சினை அழிவு இல்லாமல் அனைவருக்கும் ஆனந்தம் கிடைத்து இருக்கும்.

எது உயர்ந்த தர்மம் , எது உயர்ந்த கடமை, எது உயர்ந்த மனப்பான்மை என்று புரிந்தால் அதற்கு ஏற்றார் போல ஆனந்தம் இருக்கும். அதற்கு உதாரணமாக - போர்க்களத்தில் பீஷ்மருக்கு வந்த ஞானம் , துரியோதனை எதிர்த்த யுயுத்சுவின் ஆனந்தம் போன்றவற்றை பற்றி கர்மயோகி குறிப்பிட்டு இருப்பார். அடுத்த அத்தியாயத்திற்கு பொருத்தமாக இருந்தால் அவற்றை விளக்குகிறேன்.

உயர்ந்த நிலைக்கு போகும் போது தர்மம், நியாயம் , நன்னெறிகள் நமக்குத் தேவை இல்லை, அவசியமில்லை என்று பொருளல்ல. வாழ்வில் முன்னேற்றத்தை விரும்பும் போது, பரிணாமத்தில், மன நிலையில் முன்னேற்றத்தை விரும்பும் போது - அது தரும் இடையறாத ஆனந்தத்தை விரும்பும் போது - தர்மம், நியாயம், நியாயமற்றது, தர்மமற்றது என்ற அனைத்தையும் கடந்த ஒரு நிலைக்கு சென்று விட வேண்டும். இறைவன் வெளிப்படுத்த விரும்பும் பண்புகளுடன் தொடர்பு கொள்ளும் ஒரு ஒருமை நிலைக்கு சென்று விட வேண்டும். அதன் மூலம் ethics என்னும் இடைபட்ட நிலையையும் கடக்க முடியும். அதன் பிரிவுகளான anti ethics - non ethics போன்றவற்றையும் கடக்க முடியும். சாதாரணமாக அதைப் பற்றி ஒரு புரிதல் நமக்கு இருப்பதால் அவற்றை விளக்க முற்படவில்லை. ஆனால் நாம் உள்ள நிலையில் இருந்து நேரடியாக infra ethical என்று சொல்லப்படும் நிலைக்கு Amoral என்னும் நிலைக்கு, அன்னை விரும்பும் நிலைக்கு செல்ல முடியும். உதாரணமாக, இன்று சுய வெளிப்பாட்டுக்கு ஒரு அடையாளமான Individuality -க்கு தனித்தன்மைக்கு நாம் அனைவரும் முக்கியதத்துவம் கொடுக்கிறோம். சமூகம் சார்ந்த விஷயங்களுக்கு, நம் குழந்தைகளுக்கு முக்கியதத்துவம் கொடுப்பதுடன், முன் எப்போதையும் விட இன்று குழந்தைகளுக்கு extra curricular activities , passion , போன்றவற்றை வெளிப்பட அனுமதிக்கிறோம். காரணம் நம்மால் தவிர்க்க முடியாத அளவுக்கு அது atmosphere -லேயே வந்து விட்டது. அது போல் நம்மில் வெளிப்பட துடிக்கும் ஆன்மாவிற்கும் அதே அனுமதியை நாம் தர வேண்டும்.

இதை முதலில் நடைமுறைப்படுத்த கர்மயோகி - Infra ethical என்பதை குடும்பத்திற்கான பண்புகள் என்றும் - ethical என்பதை சமுதாயத்திற்கான பண்புகள் என்றும் - supra ethical என்பதை அன்னை விரும்பும் பண்புகள் என்றும் எடுத்துக் கொள்ளலாம் என்கிறார். அப்படி எடுக்கும் போது மூன்றுக்கும் பொதுவாக - முன்னேற்றம் என்னும் நோக்கத்தை எடுத்துக் கொள்கிறோம். அதன் மூலம் மூன்று நிலைகளிலும் ஆனந்தம் பெற முடியும் என்கிறார்.

உதாரணமாக முதல் நிலையில் அனைவரும் ஒன்றே, ஒருவர் உள்ளே அனைவரும் இருக்கிறோம் என்று குடும்பத்தில் உள்ள அனைவரின் மேல் அக்கறை, துன்பப்பட்டாலும் மனதில் ஒரு சமநிலை, coordination ஒருங்கிணைப்பு, ஒவ்வொருவருக்கான space - freedom இடம், சுதந்திரம், சுமுகம் , தன்னைத் தருதல்,சுயநலமின்மை, விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை, ஒருவருக்கு ஒருவர் மீதான நம்பிக்கை என்பது போன்ற பண்புகளை விருப்பு வெறுப்பு இல்லாமல், கடமையாக பின் பற்றலாம்.

பரிணாமத்தில் infra ethical என்னும் நிலையை நம் விவேகத்தால் பரிணாமமாக, ஆனந்தத்திற்கான இடமாக மாற்றும் முறை இது.

இரண்டாவதாக பாகுபாட்டால், ethical நிலையை ஆனந்தமாக மாற்ற முடியும். அதற்கான பண்புகளை எடுத்துக் கொண்டு அந்த நிலையையும் ஆனந்தமாக மாற்ற முயலலாம். செம்மை, துல்லியம், தூய்மை, content over form - உருவத்தை பார்க்காமல் உள்ளடக்கத்தை பார்த்து எதையும் முடிவு செய்வது, கட்டுப்பாடு, கடின உழைப்பு, பொறுப்பேற்றல், ஒழுங்கு, காலம் தவறாமை, திறன், திறமை போன்றவற்றை முன்னேற்றத்திற்கான நோக்கில் பார்த்து அதற்கான பாகுபாடோடு நடந்து கொள்வது ethical யில் நமக்கு ஆனந்தத்தைத் தரும்.

மூன்றாவதாக commitment - அர்ப்பணிப்பு, creativity -படைப்பாற்றல், தெளிவு, தீரம், தீர்க்கமான முடிவுகள், உறுதி, நோக்கம், faith, நல்லெண்ணம், நன்றியுணர்வு, நேர்மை, வெளிப்படைத்தன்மை, விடாமுயற்சி, சத்தியம், சுய சார்பு, தனித்தன்மை போன்ற பண்புகளை எடுத்துக் கொண்டால், நம் ஆன்மா வெளிப்படுத்த விரும்பும் பண்புகளுக்கு ஏற்ப நடக்கிறோம். அது நமக்கு இறைவன் விரும்பிய ஆனந்தத்தை தரும். இந்த நம் இருப்பின் நம் existence -in ஆனந்தத்தை வலிகள், துன்பங்கள் இல்லாமல் தரும்.

இன்னும் சுருக்கமாக சொல்வதென்றால் நம்முடைய, மனித நிலைக்கு சரியில்லாத , பிடிவாதம், பொறாமை, ஆசைகள், சுயநலம் , கயமை சுகத்திற்கான தேர்வுகள் comforts - ஆகியவற்றிலிருந்து வெளியே வர முயல்வது Infra Ethical . தனி மனித பண்புகளை பிரித்து அறியும் நிலை.

நம் குடும்பம், சமுதாயம், கலாச்சாரம், பண்பாடு கல்வி ஆகியவை நமக்கு போதித்தவைகளை அதன் உச்சத்தில் கடைபிடிக்க முடிவது ethical - அதாவது social values - சமுதாயத்திற்கான பண்புகளை பிரித்தறியும் நிலை. அடுத்து Supra Ethical - Supramental values - அன்னை விரும்பும் பண்புகளை பிரித்து அறிந்து செய்வது. நாம் எடுத்துக் கொள்ளம் நிலைக்கேற்ற ஆனந்தம் நமக்கு கிடைக்கும்.

கடந்த ஐந்து நிமிட உரை, அடுத்த chapter ருக்கானது என்றாலும் இந்த chapter முழுதும் கேள்விகள் மட்டுமே நிரம்பியது என்பதால் அவற்றிக்கு ஒரு solution ஆவது தர வேண்டும் என்பதால், இதை தந்து இருக்கிறேன். என்னை பொறுத்த வரை இந்த chapter முடிந்தது. அடுத்த கூடலில் அடுத்த chapter பற்றி பேசலாம்.